# 1. காவல்காரர்

## சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. பெயரில்லாத _ இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________________

அ. பெயர்+ இலாத ஆ. பெயர்+ இல்லாத

இ. பெயரில்+ இல்லாத ஈ. பெயரே+ இல்லாத

2.வைக்கோல் மேலே துணியைச் சுற்றி வைத்திருக்கும் பொம்மை.மேலே என்பதன் எதிர்ச்சொல் _______________

அ. கீழே ஆ. அருகில்

இ. தொலைவில். ஈ. வளைவில்

3. சோளக் கொல்லை பொம்மை என்பது ____________

அ. உயிருள்ள பொருள் ஆ. உயிரற்ற பொருள்

இ. இயற்கையானது. ஈ. மனிதன் செய்ய இயலாதது

4. அசைய+ இல்லை _ இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ___________

அ. அசைய இல்லை. ஆ. அசைவில்லை

இ. அசையவில்லை ஈ. அசையில்லை

5. நித்தம் _ இச்சொல்லுக்குரிய பொருள் ____________

அ. நாளும் ஆ. இப்பொழுதும்

இ. நேற்றும் ஈ. எப்பொழுதும்

LIVEWORKSHEETS